Registered as a News Paper in Sri Lanka   பக்கங்கள் 04   விலை ரூபா 3-50

# ஈழநாதம்


THE EELANAATHAM   Peoples Daily   மக்கள் தினசரி

நாதம் 01   பிரமோதூத ஆனி மீ 31 ஆம் உ   ஞாயிற்றுக்கிழமை   (15 - 07 - 1990)   ஹிஜ்ரி 1410   ஜுல்ஹஃ 21   ஓசை 147

## தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஜே.ஆர்.50,000ரூபா நன்கொடை

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்துக்குச் சிங்கள மக்களிடமிருந்து "தேசிய பாதுகாப்பு நிதி'' என்று சிறிலங்காவின் பிரேமதாசா அரசாங்கம் நிதி திரட்டி வருகிறது. இந்நிதிக்குத் துறவு பூண்ட பௌத்த பிக்குகளும் நிதி திரட்டி வருகின்றனர். மல்வத்தை பௌத்தபீடம் இந்நிதிக்கு முப்பதாயிரம் ரூபாய் வழங்கி யுத்தத்துக்கு ஆசிகூறியிருக்கிறது. சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா இந்தத் தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வழங்கியிருக்கிறார். இத்தொகைக்கான (4ஆம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சி மாவட்டத்தில் கொக்காவில் ஸ்ரீலங்கா இராணுவ முகாம் கடந்த வியாழக்கிழமை இரவு விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டது. மேலுள்ள படங்களின் விபரம்:- இத் தாக்குதலில் சேதமடைந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் ட்ரக் வண்டி, மற்றொரு வாகனம் புரண்டுகிடக்கிறது. ரூபவாஹினி அஞ்சல் கோபுரம் சாய்ந்து கிடக்கிறது. இராணுவ முகாம் கட்டிடம் நொருங்கிக் கிடக்கிறது.

## அடையாளம் காணப்படாத சடலம்

(வவுனியா)

வவுனியா குருமன் காட்டுச் சந்தியில் அடையாளம் காணப்படாத சடலம் ஒன்று காணப்படுகின்றது. இச் சந்தியில் இராணுவ நடமாட்டம் அதிகமாக உள்ளதால் சடலத்தை அப்புறப்படுத்த முடியாமல் உள்ளது.

அதேவேளை கோவிற்குளம் ரம்பைக்குளப் பகுதியில் இராணுவம் அடிக்கடி சுற்றி வளைத்து மக்களுக்குத் தொல்லை கொடுத்து வருகின்றது. இதனால் மக்கள் தினமும் பயப்பீதியுடனேயே இருக்க வேண்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ்.நகர் மீது நேற்று திடீர் குண்டுவீச்சில் ஆறுபேர் மாண்டனர்!

## ஏழுபேர் காயம்; வீடுகள், கடைகள் சேதம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரில் குடிமக்கள் நெருக்கமாக வாழும் பகுதியாகிய சுண்டிக்குளியில் அரச செயலகம் அமைந்துள்ள இடத்தில் நேற்று மாலை ஸ்ரீலங்கா விமானப்படைகள் திடீரென்று குண்டுவீசித் தாக்கியதில் ஆறுபேர் கொல்லப் பட்டனர், ஏழுபேர் காயமடைந்தனர். பல வீடுகள் குண்டுவீச்சினால் பலத்தசேதமடைந்தன.

கடந்த இரு தினங்களில் போலவே நேற்று மாலையிலும் சுமார் நான்கு மணியளவில் யாழ். கோட்டைப் ...ருந்து மறைந்த சிறிது நேரத்தின்பின் வந்த விமானமொன்று கச்சேரிப்பகுதியில் வீசிய குண்டுக்கு ஐந்து பேர் பலியானார்கள். கச்சேரியடியில் அமைந்துள்ள செயலகப் பகுதியில் முதலில் வீசப்பட்ட குண்டுகள் ஏற்படுத்திய சேதங்கள் என்னவென்று (4ஆம் பக்கம் பார்க்க)

## உணவு போடும்

## வெளியார் முயற்சியை

## வி. பி. சிங் பதவி துறக்கும் முடிவு கைவிடப்படும்?

### டில்லி நெருக்கடியைத் தீர்க்க பிரயத்தனம்

(புதுடில்லி)

இந்தியாவின் துணைப் பிரதமர் தேவிலாலின்மகன் ஓம் பிரகாஷ்சௌதாலா மீண்டும் ஹரியானா மாநில முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து மத்திய அரசின் ஆறு முக்கிய அமைச்சர்கள் ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து தாமும் பிரதம மந்திரி பதவியைத் துறக்க முடிவு செய்துவிட்டதாக பிரதமர் வி. பி. சிங் நேற்று அறிவித்தார்: இந்த அறிவிப்பும் அமைச்சரின் ராஜினாமாவும் இந்திய அரசியலில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது.

பிரதமர் பதவியிலிருந்து வி. பி. சிங் ராஜினாமாச் செய்யக் கூடாதென்றும் (4ஆம் பக்கம் பார்க்க)

# ஆறுபேர் மாண்டனர்!

## ஏழுபேர் காயம்; வீடுகள், கடைகள் சேதம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரில் குடிமக்கள் நெருக்கமாக வாழும் பகுதியாகிய சுண்டிக்குளியில் அரச செயலகம் அமைந்துள்ள இடத்தில் நேற்று மாலை ஸ்ரீலங்கா விமானப்படைகள் திடீரென்று குண்டுவீசித் தாக்கியதில் ஆறுபேர் கொல்லப் பட்டனர், ஏழுபேர் காயமடைந்தனர். பல வீடுகள் குண்டுவீச்சினால் பலத்தசேதமடைந்தன.

கடந்த இரு தினங்களில் போலவே நேற்று மாலையிலும் சுமார் நான்கு மணியளவில் யாழ். கோட்டைப் பகுதியின் மீது வட்டமிட்ட சிறிலங்கா விமானப்படை விமானங்கள் கோட்டைப் பகுதியைச் சுற்றியுள்ள குடிமக்கள் வாழும் பகுதிகளிலும் நகரின் இதர பகுதிகளிலும் குண்டுகள் வீசித்தாக்கின. இத்தாக்குதலில் பல வீடுகள், கடைகள் சேதமடைந்தன. இந்த விமானங்கள் யாழ். செயலகம் அமைந்துள்ள பகுதியிலும் ஆரியகுளம் சந்தியிலும் குண்டுகள் வீசித்தாக்கின.

இக்குண்டு வீச்சை நடத்திய விமானங்கள் அவ்விடத்திலிருந்து மறைந்த சிறிது நேரத்தின்பின் வந்த விமானமொன்று கச்சேரிப்பகுதியில் வீசிய குண்டுக்கு ஐந்து பேர் பலியானார்கள். கச்சேரியடியில் அமைந்துள்ள செயலகப் பகுதியில் முதலில் வீசப்பட்ட குண்டுகள் ஏற்படுத்திய சேதங்கள் என்னவென்று

(4ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்துக் கட்சித் தூதுக்குழு போகாது?

(கொழும்பு)

இலங்கையில் வடக்குகிழக்கு மாகாணத்தில் நடைபெறும் யுத்தம்பற்றிய ''உண்மை நிலை'' பற்றி சார்க் நாடுகளுக்கு எடுத்துக் கூறும் முயற்சியில் முதல் படியாக அடுத்த செவ்வாய்க்கிழமை புதுடில்லி செல்லவிருந்த இலங்கையின் ''அனைத்துக் கட்சிக்குழு''விலிருந்து சில கட்சிகள் வெளியேறி விட்டதால் இத்தூதுக் குழுவின் பயணம் கைவிடப் படலாம் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தூதுக்குழுவில் அங்கம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## உணவு போடும் வெளியார் முயற்சியை முறியடித்துவிட்டோம்

- பிரேமா

(இரத்தினபுரி)

தற்போதையநிலைமைகளை சாதகமாக்கிக்கொண்டு வடக்கு, கிழக்கில் உணவுப் பொருட்களை போடுவதற்கு தயாராகஇருந்த வெளியாரின் முயற்சி முறியடிக்கப்பட்டு விட்டதாக ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்த ஜனாதிபதி சர்வ

(4ஆம் பக்கம் பார்க்க)

## இரு ஸ்ரீலங்கா படகுகளை இந்திய கடற்படை கைப்பற்றியது

(சென்னை)

ஸ்ரீலங்காவுக்கு சொந்தமான இரண்டு படகுகள் இந்திய கடற்படையினரால் கைப்பற்றப் பட்டுள்ளன.

இந்தியக்கடல் எல்லையை அத்துமீறிய பொழுதே இந்தப்படகுகள் இந்தியக்கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன. இந்தப் படகுகளில் ''ராடார்'' கருவி பொருத்தப்பட்டிருந்ததுடன், தொலைத் தொடர்புக் கருவிகளும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கல்முனைக் கடற்பகுதியில் இரு ஆணின் சடலங்கள்

(விசேடநிருபர்)

பூநகரி - கல்முனைப் பகுதிக் கடலில் மனிதசடலங்கள் கரைஒதுங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை பெரியவேலி, மண்ணித்தலை பகுதிகளில் இரு ஆண் சடலங்கள் கரை ஒதுங்கினவென்றும், ஸ்பென்ரருடன் காணப்பட்ட சடலங்கள் இரண்டும் முகம் குப்புற கிடந்தனவென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதிக் கடலில் மேலும் சில சடலங்கள் காணப்படுவதாகவும், அவைகளும் அடுத்தடுத்து கரைஒதுங்கக் கூடுமென்றும் எதிர்பார்க்கப் படுகிறது. (21)

### இராணுவம் எச்சரிக்கை

## தமிழருக்கு எரிபொருள் விற்றால் மரணதண்டனை

(வவுனியா)

தமிழ் மக்களுக்கு எரிபொருள், உணவுப் பொருட்கள் என்பனவற்றை விற்றால் மரணதண்டனை வழங்கப்படும் என சிறிலங்கா இராணுவம் வவுனியா எல்லைக் கிராம சிங்கள மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வவுனியாவில் உள்ள சிங்களவர் மதவாச்சியில் எரி

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமாலை யாழ் நகர் மீது நடந்தகுண்டுவீச்சில் விடுதலைப்புலிகள் போராளி அம்பி (சித்தர் கனகரத்தினம் அச்சுவேலி) மரணமடைந்தார். அவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

# கொக்காவில்காட்டில்புலிகள்தேடுதல்

# மேலும் ஏழு சிங்கள சிப்பாய்கள் பலி!

(கொக்காவில்)

கொக்காவில் முகாமைச் சூழவுள்ள காடுகளில் விடுதலைப்புலிகள் தேடுதல் வேட்டை நடத்தியபோது மேலும் 7 சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

கொக்காவில் இராணுவ முகாம் மீதான தாக்குதலில் 65இராணுவத்தினரின் சடலங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டது தெரிந்ததே. இம்முகாம் மீது தாக்குதல் நடத்தியபோது பல இராணுவத்தினர்அயலிலுள்ள காடுகளுக்குள் சென்று பதுங்கிக் கொண்டனர். இதைத் தொடர்ந்து நேற்று விடுதலைப்புலிகள் அப்பகுதிக் காடுகளில் தேடுதல் வேட்டை நடத்தியபோது அங்கு பதுங்கி இருந்தஇராணுவத்தினருக்கும்

(4ஆம் பக்கம் பார்க்க)

# முடிவு கைவிடப்படும்?

## டில்லி நெருக்கடியைத் தீர்க்க பிரயத்தனம்

(புதுடில்லி)

இந்தியாவின் துணைப் பிரதமர் தேவிலாலின்மகன் ஓம் பிரகாஷ்சௌதாலா மீண்டும் ஹரியானா மாநில முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து மத்திய அரசின் ஆறு முக்கிய அமைச்சர்கள் ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து தாமும் பிரதம மந்திரி பதவியைத் துறக்க முடிவு செய்துவிட்டதாக பிரதமர் வி. பி. சிங் நேற்று அறிவித்தார்: இந்த அறிவிப்பும் அமைச்சரின் ராஜினாமாவும் இந்திய அரசியலில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது.

பிரதமர் பதவியிலிருந்து வி. பி. சிங் ராஜினாமாச் செய்யக் கூடாதென்றும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## "பதவி விலகலை ஏற்க முடியாது"

- பொம்மை

(டில்லி)

பிரதமர் பதவியிலிருந்து திரு.வி.பி.சிங்விலகிக்கொள்ள உள்ளதாக விடுத்துள்ள அறிவிப்பு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்று ஜனதாதள் தலைவர் திரு. எஸ். ஆர். பொம்மை கூறியுள்ளார்.

பிரதமர் வி.பி.சிங்கின் பதவி விலகல் தொடர்பான அறிவிப்பைத் தொடர்ந்து நேற்று டில்லியில் கூடிய பெருந் திரளான செய்தியாளர்கள் மத்தியில் இவ்வாறு கூறிய திரு. பொம்மை புதிய தலைவர் தெரிவு செய்யும் நிலைமையொன்று வராத நிலையில் எல்லாம் சரியாகி விடும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கட்சியின் மூத்த தலைவர்கள் பலரை நேற்றும், நேற்று முன்தினமும் சந்தித்து இது குறித்து தெளிவாக ஆராய்ந்ததாகவும் செய்தியாளர்கள் மத்தியில் கூறிய அவர் பிரதமர் வி.பி.சிங்குடனும் அவரின் நிலைப்பாடு குறித்துக் கதைத்ததாகவும் கூறினார்.

அனைத்துக் கட்சிகளின் தலைவர்களையும் இன்றுதாம் சந்திக்க உள்ளதாக கூறிய ஜனதாதள் தலைவர்திரு.எஸ். ஆர். பொம்மை தேசிய சபை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மூத்த தலைவர்கள் குழு உறுப்பினர் ஆலோசனை

(டில்லி)

ஜனதாதள் கட்சியின் மூத்த தலைவர்கள், பழைய அரசியல் கமிட்டி உறுப்பினர்கள் மத்திய அமைச்சர்கள் ஜனதாதள் முதலமைச்சர்கள் ஆகியோர் உள்ளடக்கிய அவசர சந்திப்பு ஒன்று நேற்றிரவு டில்லியில் இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பில் பிரதமர் வி.பி. சிங் பதவி விலகல் குறித்த அறிவிப்பு, மத்திய அமைச்சர்களான மொகமட் கான், அருண் நேரு, சத்யபால் மாலிக் ஆகியோரின் பதவி விலகல் குறித்தும் தெளிவாக ஆராய்ந்து விவாதிக்கப்பட்டது.

## "மக்கள் நம்பிக்கையை தட்டிக் கழிக்கமுடியாது"

(டில்லி)

''மக்கள் பெரும் நம்பிக்கையுடனும், பேரார்வத்துடனும் எமக்கு மகத்தான பொறுப்பைக் கொடுத்துள்ளார்கள்'' என்று தமிழக முதல்வர் கலைஞர்மு.கருணாநிதி கூறியுள்ளார்.

பிரதமர் வி.பி.சிங்கின் திடீர் பதவி விலகல் முடிவு தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்த அவர் மக்கள் எம்மிடம் கொடுத்துள்ள அந்தப் பொறுப்பை நாம் தட்டிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நிதர்சன ஒளிபரப்பு

(யாழ்ப்பாணம்)

நிதர்சனம் தொலைக் காட்சி ஒளிபரப்பு சேவை ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும், சனிக்கிழமைகளிலும் மாலை 7.00 மணிக்கு ஒளிபரப்பப்படும். (ம)

## கருணாநிதியும் இன்று டில்லி செல்கிறார்

(டில்லி)

பிரதமர் வி. பி. சிங்கின் திடீர் பதவி விலகல் அறிவிப்பைத் தொடர்ந்து தேசிய முன்னணியின் தலைவர் திரு. என். டி. ராமராவ் ஆந்திராவிலிருந்து நேற்று டில்லி வந்து சேர்ந்தார்.

இதேவேளை தமிழக முதல்வர் மு. கருணாநிதி, அஸாம் முதலமைச்சர் ஆகியோரை உடனடியாக இன்று டில்லிவருமாறு அவசர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதுடன்; தேசிய முன்னணிக் கூட்டத்தில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

பீற்றர் சிங்கம் நாகேஸ்வரி என்பவர்களது உணவு முத்திரை 12-7-90 அன்று சுன்னாகத்தில் தவறிவிட்டது. கண்டவர்கள் கீழுள்ள முகவரியில் ஒப்படைக்கவும். ராசேந்திரம் தெல்லிப்பளை சிக்னலடி.

(R-520)

## விற்பனைக்கு

கோவில்களுக்கு தேவையான பூசைமணி, அசையாமணி, திருவாசி, குத்துவிளக்கு, ஸ்தூபி, வேல், சூலம் கும்ப செம்பு அடுக்குத்தீபம், பஞ்சாலாத்தி, பட்டுக்குடை அனைத்துப் பொருட்களும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். ஸம்ஸ்:- 297, K.K.S றோட், தற்போது:- 76/2 நாவலர், றோட், சோனக தெரு, யாழ்ப்பாணம். (R-517)

## எனக்குத் தொடர்பில்லை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி தபால் அலுவலகம் சேதமடைந்து போயிருப்பதாகவும், மன்னார் மாவட்டத்தில் தபால் அலுவலகம் தீயிடப்பட்டு எரிக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்திக்கும் தனக்கும் தொடர்பு இல்லை என வடமாகாண தபால் அத்தியட்சகர் எஸ். எம். சேதுகாலர் தெரிவித்துள்ளார்.

## ஆசி வேண்டி பிரார்த்தனை

(விசேட நிருபர்)

சிங்கள இனவெறி அரசு தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள இனப் படுகொலைகளைக் கண்டித்தும், தமிழ் மக்கள் உரிமைகளைப் பெற போராடும் விடுதலைப் புலிகளுக்கு ஆசி வேண்டியும் கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். வண் - வடமேற்கு ஸ்ரீ பேச்சியம்மன் தேவஸ்தானத்தில் விசேட பூசை நடத்தப்பட்டது.

(21)

## வெடிக்காத பீப்பாக்குண்டு

(விசேட நிருபர்)

நேற்று முன் தினம் (13-7-90) வெள்ளிக்கிழமைமாலை யாழ் நகரப் பகுதியில் பீப்பா எரி குண்டு வீச்சு நடைபெற்ற பொழுது வீசப்பட்ட பீப்பா எரிகுண் டொன்று குருநகர் மவுண்கார்மல் வீதி குருசு என்பவரது வீட்டில் விழுந்து வெடிக்காமல் காணப்பட்டது.

குண்டு வீழ்ந்ததில் வீட்டுக் கூரை, சுவர்கள், வீட்டுத் தளபாடங்கள் பெரும் சேதமடைந்தன.

குருநகர் புதுமை மாதா தேவாலயமும் இரண்டாம் தடவையாகச் சேதமடைந்துள்ளது. (21)

## "தென்றல்" உத்தியோகத்தர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரிய குளம் புதிய உயர் கல்லூரியின் சமூக சேவைப்பிரிவான 'தென்றல்' உத்தியோகஸ்தர் தெரிவு அண்மையில் நடைபெற்ற போது கீழ்க்காணுவோர் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் செல்வன் கா. யோ. கிரிதரன் உபதலைவர்கள் செல்வன் என். சிவகுமார், செல்வி எஸ். கவிதா செயலாளர் செல்வன் த. யோகராசா, உபசெயலாளர்கள் செல்வன் சி. கெங்காதரன், செல்வி எம். சுமித்திரா பொருளாளர் செல்வி கே. வைதேகி, கணக்காய்வாளர் செல்வி எஸ். சந்திரபவானி, நிர்வாக குழு உறுப்பினர்கள் செல்வன்கள் க .பிரதாபன், எஸ். ராஜ்குமார், செல்விகள் க. சத்தியா, ப. ஜெயந்தி, கோ. இந்திரா, பி.ஜெயந்தி, சி. விஜயதேவி.

பணிப்பாளர்கள், திருவாளர்கள் அ. குமாரவேலு, என். குழந்தைவேலு, மா.சண்முகநாதன், கே. குணராசா, கே. யோகராசா, எம். ஜெகநாதன், க. வேலாயுதபிள்ளை, திருமதி ச. அருள்நங்கை.

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



லூ. சார்ல்ஸ் அன்ரனி

(சிலன் - திருமலை)

வீரமரணம்: 15-07-1983



அருள்நாதன் (ஆனந்தன்

மயிலிட்டி)

வீரமரணம்: 15-07-1983



செல்வநாயகம் செல்லக்கிளி

(கல்வியங்காடு)

வீரமரணம்: 23-07-1983

உங்கள் தடங்களில் தொடரும்வேங்கைகள்
தங்கத் தமிழ் மண் விடுதலை வெல்வர்
உங்கள் உதிரம் உயிர்க்கும் மண்ணில்
பொங்கும் சுதந்திர தாகம் தணியும்.

☐ தமிழீழமக்கள்

## ஓராண்டு நினைவு அஞ்சலி



மலர்வு 06 — 02 — 1966

தாயக மண்ணில் 26 — 06 — 1989

### பவானி (நித்திலா) நல்லையா

திதி; 15-07-1990

### நித்திலா...... நீ கரைந்ததேன்!

வலம்புரிச் சங்காய் இங்கே
வந்து நீ பிறந்த போது
நிலவு தான் எமது வீட்டில்
நிறைந்ததோ என்று நாங்கள்
குலவிநாம் மகிழ்ந்த போது
குமரியாய் வளர்ந்து நீயும்
கலைமகள் போல நன்கு
கல்வியில் சிறந்து வந்தாய்!

பல்கலைக் கழகம் சென்று
படித்திடும் சிறப்பைக் கண்டு
வெள்ளமாய் எங்கள் நெஞ்சு
விண்ணிலே மிதந்த நேரம்
வல்லவர் புலிகள் சென்ற
வழியிலே நாட்டைக் காக்க
நல்மனம் கொண்டு நீயும்
நடந்திட.... அதையும் ஏற்றோம்.

தாக்குதல் யாவும் கற்று
தளிர்க் கரம் தன்னில் ''ஏக்கே''...
தூக்கி நீ எதிரி தம்மைத்
துவம்சமே செய்த சேத்...
தாக்கி நாம் தளரவில்லை;
தனிப்பெரும் மகிழ்வே கொண்டோம்:
''சீக்கிரம் எமது மண்ணின்
சிறப்பினைக் காப்போம்'' என்றாய்;

பாத்தியைக் கட்டி நாங்கள்
பண்புடன் வளர்த்த முல்லை
பூத்து நல் மணத்தைச் சிந்தி
புண்ணிய மண்ணில் நின்று
காத்திடும் சிறப்பைக் கண்டு
கனிந்திடும் வேளை தன்னில்
காற்றென எம்மை விட்டுக்
கரைந்ததேன் நித்திலாவே?

க. நல்லையா
''பவானி அகம்''
கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.

தந்தை, தாய், தம்பிமார்
உறவினர், நண்பர்கள்.,

(B/ 1257)


## வைற் ஹவுஸ்

### அந்திய கால சேவை

119, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

எமது ஸ்தாபனம் எந்நேரமும் திறந்திருக்கும் இங்கு வரமுடியாத பட்சத்தில் கீழே குறிப்பிட்ட விலாசத்தில் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

வைற் ஹவுஸ்
(அந்திய கால சேவை)
ஆடியபாதம் வீதி,
சந்தைக்கு அருகாமையில்
கொக்குவில் மேற்கு, கொக்குவில்

(B/1255)

## இடமாற்றம் பற்றிய அறிவித்தல்

146, நவீன சந்தையில் இயங்கி வந்த

## சுத்தம் சுகம் தரும்

சுகாதார முறையில் தயாரிக்கப்படும்

## இடமாற்றம்

வைற் ஹவுஸ்

(அந்திய கால சேவை)
ஆடியபாதம் வீதி,
சந்தைக்கு அருகாமையில்
கொக்குவில் மேற்கு, கொக்குவில்

(B/1255)

---

வீரமரணம்: 15-07-1983 வீரமரணம்: 15-07-1983 வீரமரணம்: 23-07-1983

உங்கள் தடங்களில் தொடரும்வேங்கைகள்
தங்கத் தமிழ் மண் விடுதலை வெல்வர்
உங்கள் உதிரம் உயிர்க்கும் மண்ணில்
பொங்கும் சுதந்திர தாகம் தணியும்.

☐ தமிழீழமக்கள்

---

புண்ணிய மண்ணில் நின்று
காத்திடும் சிறப்பைக் கண்டு
கனிந்திடும் வேளை தன்னில்
காற்றென எம்மை விட்டுக்
கரைந்ததேன் நித்திலாவே?

க. நல்லையா
''பவானி அகம்''
கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.

தந்தை, தாய், தம்பிமார்
உறவினர், நண்பர்கள்.,

(B/ 1257)

---

## இடமாற்றம் பற்றிய அறிவித்தல்

146, நவீன சந்தையில் இயங்கி வந்த

### "அரஸ் ரெக்ஸ்ரைல்ஸ்"

தற்போது பாதுகாப்புகாரணங்களை முன்னிட்டு 550/ 8A கே. கே. எஸ். வீதி, (தட்டா தெருச் சந்திக்கு அருகாமையில்) அமைந்துள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

முக்கிய குறிப்பு- புடைவை வகைகள் மலிவு விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

## அரஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

550/8A கே. கே. எஸ். வீதி,
(தட்டாதெருச் சந்திக்கு அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

(B/1241)

---

## சுத்தம் சுகம் தரும்

சுகாதார முறையில் தயாரிக்கப்படும்

**T. K.** ஸ்பெசல் மார்க் நல்லெண்ணை
தரமானது. நம்பிக்கையானது....

- உணவு வகைகள் தயாரிக்கவும்
- உடலுக்கு உறுதி அளிக்கவும்
- உங்கள் கேசத்திற்கு குளிர்மையூட்டவும்

**தி. க. ஸ்பெசல் மார்க் நல்லெண்ணை**

கிடைக்குமிடம்:

## தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்

ஆனைக்கோட்டை.

(B-1240)

---

## இடமாற்றம்

## ஸ்ரீலங்கா புத்தகசாலை

234, K. K. S. வீதி யாழ்ப்பாணத்தில்
இயங்கி வந்த எமது ஸ்தாபனம்
சூழ்நிலை காரணமாக இப்போது

**14, அம்மன் வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்**

என்ற முகவரியில் தற்காலிகமாக நடைபெறுகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

நிர்வாகி.

(B/ 1248)

---

உங்கள் தேவைக்குகந்த.... தரம்வாய்ந்த நவீன டிசைன்களிலான **மரத் தளபாடங்களின்** மொத்த விற்பனையாளர்கள்

சகலவிதமான மர வகைகளும் **அரிவு வேலை** குறித்த தவணையில் செய்து கொடுப்பவர்கள்

# மூர்த்தி அரிவு ஆலை

51/1, கேசாவில் பிள்ளையார் கோவில் வீதி, வண்ணார்பண்ணை மேற்கு,
யாழ்ப்பாணம்.

(R/1286)

## சிந்தனைக்கு

உயிரோடு உள்ளபோது, உலகு அனைத்தையும் அடக்கி ஆள ஆர்வம்கொண்ட நாம், இறந்தபின், எவ்வளவு சிறிய அளவு மண், நம்மை அடக்கி விடுகிறது.

— இரண்டாம் பிலிப்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம், 15-07-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# அழிவில் அம்மையாருக்கும் பங்குண்டு!

இலங்கையில் வடக்கு கிழக்குப் பகுதிகளின் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரே வழி என்று திருமதி சிறிமா பண்டாரநாயக்கா கூறியிருக்கிறார்.

உலகின் முதலாவது பெண் பிரதமர் என்று பெயர் பெற்றவர், 1960ஆம் ஆண்டு தொடக்கம் 1965ஆம் ஆண்டு வரையிலும் பின்னர் 1970 ஆம் ஆண்டு முதல் 1977ஆம் ஆண்டு வரையிலும் சிறிலங்காவின் பிரதம மந்திரியாக ஆட்சிப்பீடத்திலிருந்தவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா. இப்பொழுது சிறிலங்காவின் எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிறார்.

வியட்நாமில் பௌத்தர்கள் பாதிக்கப்பட்டபோது அவர்களுக்காக ஐ நா. வரை சென்று குரல் எழுப்பியவரும் திருமதி சிறிமா பண்டாரநாயக்காதான். இந்திய - சீன எல்லைப் பிரச்சினையில் இருநாடுகளுக்கிடையிலும் யுத்தம் மூண்டபோது யுத்தத்தை நிறுத்தி பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று இருநாடுகளுக்கும் தூது சென்று சமரச முயற்சிகளிலீடுபட்டவரும் இவரே!

இன்று வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்களுக்கு எதிராக சிறிலங்கா சிங்கள பௌத்த அரசு முப்படைகளையும் சிங்கள காடையர்களையும் ஏவிவிட்டு இன அழிப்பிலீடுபட்டு வருவதைப் பார்த்த பின்னரும் இந்தப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுதான் ஒரே வழி என்று திருமதி சிறிமா பண்டாரநாயக்கா கூறியிருக்கிறார்.

இது அதிர்ச்சி தரக்கூடியதோ ஆச்சரியமானதோ அல்ல. திருமதி சிறிமா பண்டாரநாயக்காவிடமிருந்து எதிர்பார்க்கக்கூடிய கருத்துத்தான்.

ஐ. நா. அரங்கில் உலகில் வன்செயலை எதிர்த்து "உலகின் ஒரு தாயாகவும் பேசுகிறேன்" என்று ஒரு காலகட்டத்தில் குரல் எழுப்பிய திருமதி சிறிமா பண்டாரநாயக்கா சொந்த நாட்டில் ஒரு தேசிய இனத்தை இராணுவபலம் கொண்டு அழிக்க வேண்டும் என்று கூறுகிறாரென்றால் சிறிலங்காவில் சிங்கள பௌத்த பேரினவாதம் எந்த அளவுக்கு உச்சம் பெற்றிருக்கிறது என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

மொழி வெறியைத் தூண்டி இனத்துவேஷத்தைக் கிளப்பி 1956 ஆம் ஆண்டில் ஆட்சிக்குவந்த எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா, தமிழ் மக்களுக்கு ஓரளவாவது அதிகாரம் பகிர்ந்தளித்து அவர்களது பாரம்பரியப் பிரதேசத்தையும், உரிமைகளையும் அங்கீகரிக்காவிட்டால் நாட்டில் அமைதி நிலவ முடியாதென்பதை ஓராண்டுக்குள்ளேயே உணர்ந்தார்.

இதன் பயனாக 1957 ஆம் ஆண்டில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இணைந்துகொள்ளும் உரிமையுடைய பிரதேசசபைகளை அமைப்பதற்கு திரு. செல்வநாயகத்துடன் பண்டாரநாயக்கா ஓர் ஒப்பந்தமும் செய்துகொண்டார்.

பண்டாரநாயக்காவின் கொலைக்குப்பின் 1960 ஆம்

# போர்க்காலச் சிந்தனைகள்

## போர் ஏன்? — 1

வடக்கு கிழக்கு மாகாணங்கள் எங்கணும் பாரிய குண்டு வெடிப்புச் சத்தங்கள்; இடையிடையே துப்பாக்கி வேட்டுக்களின் ஓசை; வானிலிருந்து ஹெலியின் தாக்குதல்; பொம்மர்களின் குண்டு வீச்சு.

சிங்கள இனவாதப் படையின் இத்தகைய தாக்குதல்களை எதிர்த்து தமிழ் இளைஞர்கள் வீரப்போர் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

சிலர் வீரமரணமடைகிறார்கள்; பலர் காயமடைகிறார்கள்.

பல்லாயிரக் கணக்கானோர் சிங்களக் குண்டர்களின் தாக்குதலுக்கும், கட்டுப்பாடில்லாத சிங்களப் படையினரின் துன்புறுத்தலுக்கும் அஞ்சி தமது வதிவிடங்களை விட்டு அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளார்கள்.

சொத்து சுகங்களை இழந்த மக்கள் பசியால் வருந்திக் கொண்டிருக்கிறார்கள்.

நோய் வாய்ப்பட்டோர் சிகிச்சை பெறமுடியாத நிலையில் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

உற்றார் உறவினர்களை இழந்தவர்கள் அவர்களைத் தேடி அலைகிறார்கள்.

கொலை, கொள்ளை, மானபங்கம்.

மக்கள் அகதிகளாக தங்கியிருக்கும் தேவாலயங்கள், கோயில்கள், பாடசாலைகள் மீது குண்டு வீச்சு.

சிங்களப் பேரினவாத அரசு தமிழ் மக்கள் மீது போர்ப் பிரகடனம் செய்து தனது கையாலாகாத்தனத்தை சாட்டிக் கொண்டிருக்கிறது.

சாதி சமய கட்சி வர்க்க பேதங்களை மறந்து சிங்கள மக்கள் தமிழர்களுக்கு எதிராக அணிதிரண்டு விட்டனர்.

இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் நாம் உணர்வற்ற சடங்களாக "மானம்சிறிதென்றெண்ணி வாழ்வு பெரிதென்றெண்ணும் ஈனர்களாக" இருக்கின்றோம்.

இன்று நடைபெற்றுக் கொண்டிருப்பது சாதாரண போர் அல்ல; இது ஒரு புனிதப்போர்; விடுதலைப்போர்.

இப்போரில் தமிழ் மக்கள் தோற்றுப் போவார்களேயானால் தமிழினம் நிரந்தர அடிமையாக இருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழினம் ஆண்ட இனம்; அது மீண்டும் ஆளவேண்டும் என்பதற்காக இப்போர் தொடுக்கப்படவில்லை.

சிங்கள மக்களின் வாழ்விடத்தின் ஒரு பகுதியைக் கைப்பற்றவேண்டும் என்பதற்காக இப்போர் தொடுக்கப்படவில்லை.

முன்னொரு காலத்தில் எல்லாளனை சிங்கள துட்டகைமுனு போரில் தோற்கடித்ததற்குப் பழிவாங்க வேண்டும் என்பதற்காக இப்போர் தொடுக்கப்படவில்லை.

பெரும்பான்மை மக்களின் சமயமாகிய பௌத்தத்தை சிங்கள ஆட்சியாளர்கள் சிறுபான்மையினரான தமிழர்கள் மீது திணிப்பதை தடுக்க வேண்டும் என்பதற்காக இப்போர்தொடுக்கப்படவில்லை.

சிங்கள மக்களின் பொருளாதார வளங்களைக் கைப்பற்றுவதற்காக இப்போர் தொடுக்கப்படவில்லை.

சிங்கள மக்களை கொன்று குவித்து வெறியாட்டம் ஆட வேண்டும் என்பதற்காக இப்போர்தொடுக்கப்படவில்லை.

தமிழர்கள் தம் வீரதீரப் பிரதாபங்களை உலகுக்குக் காட்டும் காலம் வந்துவிட்டதென நினைத்து இப்போர் தொடுக்கப்படவில்லை.

அப்படியென்றால் ...? இது தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி ஆளும் சிங்கள பேரினவாதத்துக்கு எதிரான போர்.

தமிழர் இனத்தால், மொழியால். சமயத்தால் வேறுபட்டவர்கள்; அவர்கள் எமது வரலாற்று எதிரிகள் எனக்கருதுபவர்களுக்கு எதிரானபோர்.

—"எமது இனம் சரியோ பிழையோ" என நினைத்து தான் தோன்றித்தனமாக செயற்படுவோருக்கு எதிரான போர்.

—இந்த நாட்டின் ஆளும் வர்க்கம் சிங்களவர்கள் தான் எனக் கூறியவர்களுக்கு எதிரான போர்.

—இந்த நாட்டில் தமிழர்களுக்கு உரிமைகளே கிடையாது; எம்மால் வழங்கப்படும் சலுகைகளைப் பெற்று அவர்கள் வாழவேண்டும் எனக் கூறுபவர்களுக்கு எதிரான போர்.

தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகள்; அவர்கள் எம்மால் ஆளப்படவேண்டும் என்னும் மனப்பாங்குடையவர்களுக்கு எதிரான போர்.

—ஆண்டாண்டு காலமாக பேச்சு வார்த்தைகள், ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் என்னும் பூச்சாண்டிகளைக் காட்டி தமிழ் மக்களை ஏமாற்றிய கெட்டிக்காரர்களுக்கு எதிரான போர்.

—தமிழர்கள் சந்திரனைத் தரும்படி கேட்டார்கள் ஆனால் நாம் அவர்கள் கேளாததையே கொடுத்த போது அதை மகிழ்ச்சியோடு பெற்றுக்கொண்டார்கள் என தம்பட்டமடித்தவர்களுக்கு எதிரான போர்

"24 மணித்தியாலயத்தில் சிங்கள மட்டும்" எனப்பிதற்றிய பித்தர்களுக்கு எதிரான போர்.

தமிழ் மக்களுக்கு எதிராக இனக் கலவரங்களை தூண்டி காடையர்களைக் கொண்டு தமிழர்களை வெட்டி விழுத்தியும் உயிரோடு எரித்தும் மகிழ்ந்ததுடன் "தமிழர்கள் கொஞ்சம் உருசி பார்க்கட்டும்" என கூறியும் நின்றபுல்லர்களுக்கு எதிரான போர்.

—போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம் எனக் கொக்கரித்தவர்களுக்கு எதிரான போர்.

தமிழர்களை அழித்தொழிக்க சாத்தானுடனும் கூட்டுச்சேருவோம் என ஓலமிட்ட தம்மிஷ்டங்களுக்கு எதிரான போர்.

ஒன்பது மாத காலமாக அடைகாத்து விட்டு ஈற்றில் "தமிழர்களுக்கு உரிமைவழங்குவதை பௌத்த சங்கமும் சிங்கள மக்களும் விரும்பவில்லை" எனக் கூறிய முதுகெலும்பில்லாத குழுவுக்கெதிரான போர்.

தமிழ் இளைஞர்கள் ஏன் போர் தொடுத்துள்ளார்கள் என்பதும் இப்போது தெரிகிறதா?

"எல்லாவகைப் போர்களுக்குமே நான் எதிரி ஆனால் ஒரு நாட்டிடமிருந்து நீதி கிடைக்கும்படி செய்வதற்கு போரைத் தவிர வேறு வழி இல்லை. என்றால், நிரூபிக்கப்பட்ட தன் பிழையை ஒப்புக் கொள்ள அந்த நாடு பிடிவாதமாக மறுக்குமானால் தொடர்ந்து அலட்சியம் செய்யுமானால், அதன் மீது போருக்குப் போகவேண்டியே இருக்கும்"

இது கருணாமூர்த்தி காந்தி அடிகளின் மேலான கூற்று என்பது தெரியுமா?

சிங்கள அரசு நமக்கு நீதி வழங்க மறுக்கிறது. தன்பேரினவாத கொள்கையை பிழையானதென ஒப்புக் கொள்ள மறுக்கிறது.

எம்மை அலட்சியப்படுத்துகிறது.

-- இவற்றை உணர்ந்ததன் பின்னர் தான் தமிழ் இளைஞர்கள் போர்க்கொடி தூக்கினார்கள் என்பதை மறந்து விடக் கூடாது.

இன்றைய போர் நிலையில் கூட நாம்

"தன்பெண்டு தன் பிள்ளை சோறு வீடு சம்பாதியம் இவையுண்டு தானுண்டென் போன் சின்ன தொரு கடுகு போல் உள்ளம் கொண்டோன்" ஆக இருக்கலாமா?

நாங்கள் பார்வையாளர்களாக இருந்து சிங்கள இனவாத இராணுவத்தால் வெட்டிக் கொலை செய்யப்பட வேண்டும் என்பது எங்கள் தலை விதியா?

சிந்தித்துப் பாருங்கள்.

இன்றைய போர் சரியானதா பிழையானதா என ஆராயும் நேரம் அல்ல இது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையேயான போர் தானே எமக்கென்ன என அலட்சியப்படுத்தக் கூடிய போர் அல்ல இது.

தமிழ் மக்கள் இனி என்றுமே அரசுக்கு எதிராக எந்த விதமான போராட்டத்தையும் செய்ய அஞ்சுமளவுக்கு அவர்களை நசுக்கி

## இரத்தினம்

எறிந்து விட வேண்டும் என்ற நோக்கத்துடன் முழுச் சிங்கள மக்களும் ஒன்றிணைந்து நடத்தும் போர் இது.

சிங்கள ஆமிக்காரன் 'சன்னதப்பட்டுக் கொண்டு' வரும் போது படித்தவன் பாமரன், அரச உத்தியோகத்தன் சுய தொழிலாளன், கிழவன் குமரன், கிழவி, குமரி, உயர் சாதிக்காரன், தாழ்ந்தசாதிக்காரன், ஏழை, பணக்காரன் என்றெல்லாம் பார்க்காது வெட்டி விழுத்துகிறான் என்பதை கருத்திற் கொள்ளுங்கள்

அவனுக்கு எல்லாரும் 'பறதெமல்' தான் என்பதை மறவாதீர்கள்.

தொடர்ந்தும் நாம் பார்வையாளர்களாக இருக்கலாமா?

விமர்சிப்பதை விடுத்து செயலில் இறங்குவோம்.

மக்கள் சக்திக்கு எதிராக எந்த இராணுவமும் நின்று பிடிக்க முடியாது என்பதை நிரூபிப்போம்.

(தொடரும்)

மூன்று மந்திரிகள் ராஜினாமா எதிரொலி

# பிரதமர் பதவியிலிருந்து வி. பி. சிங் விலக முடிவு!

# "மாகாணசபையல்ல மாநில சுயாட்சியே"

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடாத்தப்போவதாக ஸ்ரீலங்கா அரசு அறிவித்திருப்பதை தாம் ஏற்றுக்கொள்ளமுடியாது என விடுதலைப் புலிகளின் பிரமுகர் ஒருவர் லண்டனில் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு தேர்தல் நடை

அவர் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் ஸ்ரீலங்கா அரசு உண்மையிலேயே விரும்பினால் முழு அரசு அதிகாரம் கொண்ட மாநில சுயாட்சி வழங்க ஒத்துக் கொள்ளவேண்டும்.

வடகிழக்கு மாகாணத்துக்கு மாநில சுயாட்சி வழங்கப்பட

''உலகின் ஒரு தாயாகவும் பேசுகிறேன்'' என்று ஒரு காலகட்டத்தில் குரல் எழுப்பிய திருமதி சிறிமா பண்டாரநாயக்கா சொந்த நாட்டில் ஒரு தேசிய இனத்தை இராணுவபலம் கொண்டு அழிக்க வேண்டும் என்று கூறுகிறாரென்றால் சிறிலங்காவில் சிங்கள பௌத்த பேரினவாதம் எந்த அளவுக்கு உச்சம் பெற்றிருக்கிறது என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

மொழி வெறியைத் தூண்டி இனத்துவேஷத்தைக் கிளப்பி 1956 ஆம் ஆண்டில் ஆட்சிக்குவந்த எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா, தமிழ் மக்களுக்கு ஓரளவாவது அதிகாரம் பகிர்ந்தளித்து அவர்களது பாரம்பரியப் பிரதேசத்தையும், உரிமைகளையும் அங்கீகரிக்காவிட்டால் நாட்டில் அமைதி நிலவ முடியாதென்பதை ஓராண்டுக்குள்ளேயே உணர்ந்தார்.

இதன் பயனாக 1957 ஆம் ஆண்டில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இணைந்துகொள்ளும் உரிமையுடைய பிரதேசசபைகளை அமைப்பதற்கு திரு. செல்வநாயகத்துடன் பண்டாரநாயக்கா ஓர் ஒப்பந்தமும் செய்துகொண்டார்.

பண்டாரநாயக்காவின் கொலைக்குப்பின் 1960 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆட்சிப்பீடத்துக்கு வந்த திருமதி சிறிமா பண்டாரநாயக்கா, கணவரின் கொள்கையைத் தூக்கியெறிந்து இனத்துவேஷத்தையே வளர்த்தார்.

1958ஆம் ஆண்டில் அவசரகாலநிலையிலும் பண்டாரநாயக்கா கொண்டு வந்து நிறைவேற்றிய தமிழ்மொழி உபயோக விசேஷ சட்டத்துக்கு 1966 ஆம் ஆண்டு ஜனவரியில் டட்லிசேனநாயக்கா அரசு விசேஷ ஷரத்துக்கள் கொண்டு வந்தபோது அதை சிறிமா எதிர்த்தார்.

1970ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த சிறிமா பண்டாரநாயக்கா ஐக்கிய முன்னணி அரசு இலங்கையை ஒரு குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்துவதற்கு குடியரசு அரசியலமைப்பை உருவாக்கியது. இச் சமயத்தில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய பல பிரேரணைகளை தமிழ்ப் பிரதிநிதிகள் அரசியல் நிர்ணய சபையில் கொண்டுவந்தபோது அவற்றை விவாதத்துக்கு எடுக்காமலே நிராகரித்தவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா.

இப்படித் தமிழ் மக்களின் உரிமைகளை மறுத்து இனத்துவேஷத்தைக் கிளப்பி ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றும் ஒரே நோக்கத்தைக் கொண்ட சிறிமா அம்மையாரிடமிருந்து இனப்படுகொலைக்கு எதிராக ஒரு வார்த்தையையாவது எதிர்பார்ப்பது கசாப்புக் கடைக்காரனிடம் கருணையை எதிர்பார்ப்பது போலத்தான்!

1961ஆம் ஆண்டில் தந்தை செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக் கட்சியினரும் தமிழ் மக்களும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் அரசாங்க திணைக்களங்களின் முன் சத்தியாக்கிரகம் செய்து இப்பகுதியில் சுமார் மூன்று மாதங்கள் அரச இயந்திரத்தை ஸ்தம்பிக்கச் செய்திருந்தனர்.

இச்சமயத்தில் வெளிநாடு சென்று திரும்பிய பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கா, தமிழரின் போராட்டத்தினால் ''ஏற்படப்போகும் விளைவுகளுக்கு தமிழரசுக் கட்சியே பொறுப்பேற்க வேண்டும்'' என்று ஓர் அறிக்கை வெளியிட்டார்.

இதற்குத் தந்தை செல்வநாயகம் பதிலளித்து அறிக்கை விடுத்தார்.

''1959ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் இருபத்தாறாம் தேதி துப்பாக்கி ஏந்திய ஒரு கொலைகாரனின் முன்னால் உங்கள் கணவர் எந்த நிலையில் நின்றாரோ, அதே நிலையில்தான் நீங்கள் உங்கள் படைகளை எங்கள்மீது ஏவிவிடும்போது நாங்களும் நிற்போம் என்பதை நாம் நன்கறிவோம்'' இப்படி தந்தை செல்வா தமது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

சிறிமா அம்மையார் படைகளைஏவி நிராயுதபாணிகளான சத்தியாக்கிரகிகளைத் தாக்கிக் கலைத்தார்.

இன்று வடக்கிலும் கிழக்கிலும் யுத்தம் நடைபெற்று அழிவேற்பட்டுக் கொண்டிருக்கிறதென்றால் அதற்கு சிறிமா அம்மையாருக்கும் பெரும்பங்கு உண்டு.

1961ஆம் ஆண்டில் சிறிமா அம்மையார் படைகளை ஏவி விட்டபோது இருந்த நிலை இன்று இல்லை என்பதையும் மானம்ஒன்றே பெரிதெனக்கொண்ட மறவர் படை வீரவேங்கைகள் இன்று தமிழீழத்தைக் காத்து நிற்கிறார்கள் என்பதையும் சிறிமா அம்மையார் உணர்ந்துகொள்ளட்டும்.

மக்கள் தமிழர்களுக்கு எதி ராக அணிதிரண்டு விட்டனர். இந்த இக்கட்டான சூழ்

பிரதாபங்களை உலகுக்குக் காட்டும் காலம் வந்துவிட்ட தென நினைத்து இப்போர்

தமிழ் மக்களுக்கு எதிராக இனக் கலவரங்களை தூண்டி

கூட நாம் ''தன்பெண்டு தன் பிள்ளை

நிரூபிப்போம்.

(தொடரும்)

## மூன்று மந்திரிகள் ராஜினாமா எதிரொலி

# பிரதமர் பதவியிலிருந்து வி. பி. சிங் விலக முடிவு!

## ஹரியானா முதல்வர் நியமனத்தால் இந்திய மந்திரி சபையில் நெருக்கடி

(புதுடில்லி)

ஹரியானா மாநிலத்தின் முதலமைச்சராக இந்திய துணைப்பிரதமர் தேவிலாலின் மகன் ஓம்பிரகாஷ் சௌதாலா மீண்டும் நியமிக்கப்பட்டது தொடர்பாக வி. பி. சிங் தலைமையிலான இந்திய மத்திய அமைச்சரவையில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

சௌதாலா ஹரியானா மாநிலத்தின் முதலமைச்சராக மீண்டும் நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்து வி. பி. சிங் மந்திரி சபையிலிருந்து அருண்நேரு, ஆரிவ்முகம்மது கான், மாலிக் ஆகிய மூன்று அமைச்சர்களும் தாங்கள் பதவியிலிருந்து விலகும் கடிதங்களைப் பிரதமர் சிங்கிடம் கையளித்தனர்.

மூன்று அமைச்சர்கள் ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து தாமும் பிரதமர் பதவியிலிருந்து விலகப் போவதாக பிரதமர் வி. பி. சிங்கும் நேற்றுத் தெரிவித்தார்.

தேசிய முன்னணித் தலைவர் என். ரி. ராமராவுக்கும் ஜனதா தள் தலைவர் எஸ். ஆர். பொம்மைக்கும் வி. பி. சிங் நேற்று எழுதியுள்ள கடிதத்தில் புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்காக பாராளுமன்றக் குழுக் கூட்டத்தைக் கூட்டுமாறு கோரியிருக்கிறார்.

ஜனதா குழுக் கட்சித் தலைவர் எஸ். ஆர். பொம்மை ஓம் பிரகாஷ் சௌதாலாவைத் தவிர சகல ஜனதா தள் மாநில முதலமைச்சர்களையும் கொண்ட ஒரு கூட்டமொன்றைக் கூட்ட விருக்கிறார்.

புதுடில்லியில் எஸ். ஆர். பொம்மை பிரதமர் வி.பி. சிங்கைச் சந்தித்துப் பேசினார். புதுடில்லியில் அரசியல் ஆலோசனைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சிங் மந்திரி சபையிலுள்ள மற்றொரு அமைச்சரான திருமதி. மேனகா காந்தியும் பிரதமர் சிங்கை நேற்றுமுன் தினம் சந்தித்துப் பேசினார். கடிதம் ஒன்றையும் அவர் பிரதமரிடம் கையளித்தார்.

## காஷ்மீர் பிரச்சினையை பேசித்தீர்க்க பாகிஸ்தானிடம் மொரோக்கோ யோசனை

(மொரோகிகோ)

காஷ்மீர் பிரச்சினையை இந்தியாவுடன்பேசித்தீர்த்துக் கொள்ள வேண்டும் என மொரோகிகோ தலைவர்கள் தன்னிடம் கேட்டுக் கொண்டதாக பாகிஸ்தான் பிரதம மந்திரி பெனாசீர் பூட்டோறாவர் விமான நிலையத்தில் செய்தியளர்களிடம் பேசும் போது இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெற்காசியாவில் பதட்டத்தையும் பூசலையும் தவிர்க்க வேண்டும் எனக் கோரியதாகவும் பெனாசீர் தெரிவித்தார்.

ஐந்து அரபு நாடுகளுக்கான விஜயத்தின் போது மொரோகிகோ சென்று திரும்பும் போது விமான நிலையத்தினால் பெனாசீர் பூட்டோ இவ்வாறு தெரிவித்தார்.



கடந்த வியாழக்கிழமை உரும்பிராயில் விடுதலைப் புலிகளால் தடுத்துவைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டோரில் ஒரு பகுதியினர் பெற்றோரிடம் ஒப்படைக்கப் பட்ட போது எடுக்கப்பட்ட படம்.

## ''மாகாணசபையல்ல மாநில சுயாட்சியே''

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடாத்தப்போவதாக ஸ்ரீலங்கா அரசு அறிவித்திருப்பதை தாம் ஏற்றுக்கொள்ளமுடியாது என விடுதலைப் புலிகளின் பிரமுகர் ஒருவர் லண்டனில் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு தேர்தல் நடைபெற்றாலும் தாம் புறக்கணிக்கப்போவதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் ஸ்ரீலங்கா அரசு உண்மையிலேயே விரும்பினால் முழு அரசு அதிகாரம் கொண்ட மாநில சுயாட்சி வழங்க ஒத்துக் கொள்ளவேண்டும்.

வடகிழக்கு மாகாணத்துக்கு மாநில சுயாட்சி வழங்கப்பட வேண்டும் இவ்வாறு அவர் கூறினார்.

## சுகாதார தொண்டர் சேவகிகள் விபரம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

திருமலை மாவட்டத்தில் கிராமங்களில் சுகாதார தொண்டர் சேவகிகள் ஆக கடமை புரிந்தவர்கள் கடந்த 13ஆம் திகதி இடம்பெயர்ந்துள்ளதால், அவர்கள் பற்றிய விபரங்கள் எமக்கு தேவைப்படுகின்றது. ஆகவே தங்கள் பெயர், தற்காலிக வசிப்பிட முகவரி விபரங்களை யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியிலுள்ள சிறுவர் பாதுகாப்பு நிதிய அலுவலகத்திற்கு அறியத்தருமாறு வேண்டப்படுகின்றனர். இக் காரியாலயத்தில் உள்ள சுகாதார உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

## லியோ கழக கூட்டம்

யாழ். மத்தியகல்லூரி லியோ கழக அங்கத்தவர்களுக்கான கூட்டம் வரும்திங்கட்கிழமை (16.7.90) காலை 10.00 மணிக்கு யாழ். யூனிவேர்சல் கல்வி நிறுவனத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்குஅனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி லியோ கழகம் கேட்டுள்ளது.

## கண் நோய்

(தீவுப்பகுதி)

வேலணைப்பகுதியில் இடம்பெயர்ந்துஅகதிகளாகவந்துள்ளவர்களுக்கு சிவப்புக் கண்ணோய் என்னும் கண்வருத்தம் ஏற்பட்டு வருகின்றது. குறிப்பாக வெள்ளைக் கடற்கரை பள்ளிவாசல் பகுதியில் இடம் பெயர்ந்து வந்துள்ளவர்களுக்கே இக் கண் வருத்தம் அதிகமாகக்காணப்படுகின்றது (15)

## உணவு வழங்க நடவடிக்கையாம்

(கொழும்பு)

வடக்கு கிழக்குபகுதிகளுக்கு தேவையான அளவு உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்கு அரசாங்கம் கிரமமான முறையில் நடவடிக்கை எடுத்துள்ளதாக உணவு கூட்டுறவு துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராட்சி தெரிவித்துள்ளார்.

இதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவி கோரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் தமக்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்கு கடன்வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் கூறினார்.

கொள்வனவு செய்யும் கடனை இரண்டு வாரங்களில் செலுத்தவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## உத்தரிய மாதா தேவாலயம் சேதம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவமுகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலால் வசாவிளான் புனித உத்தரிய மாதா தேவாலயத்தின் கூரைப்பகுதி பலத்த சேதமடைந்தது.

இந்த ஆலயத்துக்கு பின்புறமாகவுள்ள ஆசீர்வாதம், செல்வராசா, சகாயராசா, பொன்னையா ஆகியோரது வீடுகளும் இதனால் சேதமாகின.

மக்கள் இடம்பெயர்ந்துள்ளதால் வீடுகளில் திருடர்கள் தமது கைவரிசையை காட்டி வருகின்றனர்.

## புரட்சித் தினம்

(யாழ்ப்பாணய்)

நேற்று பிரான்சிய புரட்சியின் 201ஆம் ஆண்டும், பிரான்சிய தேசிய தினத்தையும் முன்னிட்டு பிரென்ஞ் கலாசாரப்பிரிவின் யாழ்க்கிளை அதன் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

Registeered as News Paper at the G. P. O.

ஈழநாதம்

# சிங்கள ஆட்சியின் சின்னமாகவா தமிழ் பிரதேசத்தில் சிங்களஇராணுவம்?

## ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கு ஈழவர் ஜனநாயக முன்னணி கடிதம்

**தமிழரின் பாரம்பரியப் பிரதேசங்களில் திணிக்கப்பட்டிருக்கும் இராணுவம் சிங்கள ஆட்சியின் சின்னமாகவும் தமிழர்களை அடக்கி ஒடுக்கும் சக்தியாகவும் தமிழர்கள் கருதுகிறார்கள் - இவ்வாறு யாழ். மாவட்ட ஈழவர் ஜனநாயக முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் இ. பரராசசிங்கம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.**

அந்தஅறிக்கையில் தொடர்ந்து கூறப்பட்டிருப்பதாவது:

''ஸ்ரீலங்கா படையினரால் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும்இராணுவநடவடிக்கைகள் தமிழ் மக்களைத் துன்பத்துக்கும், அழிவுக்கும் ஆளாக்கியுள்ளன. ஆயிரக்கணக்கான மக்கள் வேண்டுமென்றே கொல்லப்படுவதோடு, பல ஆயிரக்கணக்கான மக்கள் வீடு வாசல்களை இழந்து அகதிகளாக்கப்பட்டுள்ளனர். பல கோடி ரூபா பெறுமதியான ஆதனங்கள் அழித்தொழிக்கப்பட்டன. இராணுவ முக்கியத்துவமற்ற, மக்கள் குடியிருப்புகள் மீது குண்டு வீசுதல், ஷெல் தாக்குதல், பீப்பாக்குண்டு போடுதல், கடற்படையினர் பீரங்கிப் படகுகளிலிருந்து பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளுதல் ஆகிய நடவடிக்கைகளினால் தமிழ் மக்கள் வகைதொகையின்றிக் கொல்லப்படுவதை எப்படியும் நியாயப்படுத்தல் முடியாது, இவையெல்லாம் அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டன. இந்த அனர்த்தங்களால் ஆத்திரமடைந்துள்ள தமிழர், சிங்கள இராணுவம் எமது மத்தியில் எதற்காக முகாம்களை அமைத்து நிலை கொண்டிருக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். தமிழரின் பாரம்பரியப் பிரதேசங்களில் திணிக்கப்பட்டிருக்கும் இராணுவம்' சிங்கள ஆட்சியின் சின்னமாகவும், தமிழர்களை அடக்கி ஒடுக்கும் சக்தியாகவும் தமிழர்கள் கருதுகிறார்கள்''-

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

''அத்தியாவசிய உணவுப் பண்டங்கள், மருந்து வகைகள், எரிபொருள் ஆகியவற்றிற்குத் தமிழ்ப் பிரதேசம் தென் பகுதியிலேயே தங்கியுள்ளது, வெளிநாட்டுப் பயணத்துக்கும், கப்பல் போக்குவரத்துக்கும் கொழும்புக்கே போகவேண்டியுள்ளது. தமிழ்ப் பகுதிகளிலுள்ள விமானத்தளங்களுக்கும், துறைமுகங்களுக்கும் தேவையான வசதிகள் மறுதலிக்கப்பட்டுள்ளன. மேலும் துறைமுகங்களிலும், விமானத்தளங்களிலும் ஸ்ரீலங்கா இராணுவம் நிலை கொண்டுள்ளது''.

''அரசாங்கம் தமிழர்களைப் பழிவாங்கும் நோக்கத்துடன் மேற்கொண்டிருக்கும் பொருளாதாரத்தடை, இதே வேளை அரசாங்கம் தனது தவறுகளை மறைக்கும் வகையில் சர்வதேச சமூகத்தின் கண்களைத் துடைப்பதற்கு அரசாங்கம் வெளியிடும் அறிக்கைகளைப் பற்றியும் மக்கள் உணர்ந்துள்ளார்கள். பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கான நிதி உதவியைத் திசை திருப்புதல், அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளுக்கு தெய்வங்களின் ஆசியைப் பெறுதல், தேசிய பாதுகாப்பு நிதி திரட்டுதல் போன்ற நடவடிக்கைகள் பயன் பொருத்தமில்லாத இனவாதத்தைக் கிளப்பும் தந்திரமாகும்''.

ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொள்ளும் பட்சத்தில், தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் எம்மாலான உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு

நியூ லலிதா ஜுவலர்ஸ்

74/1 கஸ்தூரியார் வீதி,

## சின்னக்கடைச் சந்தை பாஷையூருக்கு இடமாற்றம்

(ஈச்சமோட்டை)

சின்னக்கடை மீன் சந்தையும், மரக்கறிக் கடைகளும். பாஷையூர் மீன் சந்தைக்கு இடம்மாறியுள்ளதால் ஏராளமானமக்கள் இங்கு கூடுகின்றனர்.

வியாபாரிகள்பொருட்களை வைத்து விற்க இடம் போதாமையால் கஷ்டப்படுகின்றனர். இதேவேளை குருநகர் மீனவர்களின் மீன்பிடிப் படகுகளும் பாஷையூர் துறையிலேயே நங்கூரமிட்டுள்ளன. குருநகர் மீனவர் பிடிக்கும் மீன்களும் பாஷையூர் சந்தையில் வைத்துத்தான் விற்பனையாகின்றன. (43)

## அகதிகள் முகாமில் குடிநீர்த் தட்டுப்பாடு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் தற்போது அருங்கோடைக் காலமாதலால் கொழும்புத்துறை பிள்ளையார் கிணற்றில் நீர் வற்றும் நிலையில் உள்ளது. பக்கத்தில் உள்ள பள்ளிக்கூடத்தில் அகதிகளாக இருக்கும் 500க்கும் மேற்பட்டவர்கள் இக்கிணற்றில் தான் குடிநீர் எடுக்கிறார்கள். அய... உள்ள அகதிகள் பெரும் கஷ்டத்துக்கு உள்ளாகி வருகிறார்கள். (43)

## வவுனியாவில் இராணுவம் கொள்ளை

(வவுனியா)

வவுனியா நகரத்தில் தமிழ

## க. பொ. த (உயர்தர) மாணவர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

90ஆம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றவிருக்கும் க.பொ.த. (உயர்தர) வகுப்பு மாணவர்கள் கலந்துரையாடல் இன்று காலை பத்து மணிக்கு நடைபெறவுள்ளது. உயர்தர வகுப்பு மாணவர்களைக் குறிப்பிட்ட நேரத்தில் தத்தமது பாடசாலைகளில் கூடுமாறு உயர்தர மாணவர் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பாதுகாப்பற்ற பகுதியில் உள்ள வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி மாணவிகளும், மாணவர்களும் நல்லூர் மங்கைக்கரசி வித்தியாலயத்தில் கூடும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## சுகாதார அலுவலகம் இடம் மாற்றம்

(தீவுப்பகுதி)

இதுவரை காரைநகரில் இயங்கி வந்த ஊர்காவற்றுறை சுகாதார அலுவலகம் வேலணைக்கு தற்காலிகமாக இடமாம்ற்றம் செய்யப்பட்டு வேலணைக் கிராமிய ஆஸ்பத்திரியில் இயங்கத் தொடங்கியுள்ளது. வேலணை ஆஸ்பத்திரியின் வைத்திய அதிகாரி டாக்டர் ஆ. திருநாவுக்கரசு, ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சபையினர் ஆகியோர் இவ்வலுவலகம் இயங்க பூரண ஒத்துழைப்புஅளித்துள்ளனர். (15

## பொதுக் கூட்டம்

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க வலிகாமம் பகுதி உறுப்பினர்களுக்கான கூட்டம் இன்று 15.07.90 ஞாயிற்றுக் கிழமை பி.ப 3.00 மணிக்கு விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டச் செயலகத்தில் நடைபெறஇருப்பதால் அனைத்து விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களும் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

### அனைத்துக்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வகிப்பதற்கு முதலில் ஒப்புக்கொண்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ பிரதிநிதிகள் பின்னர் மறுத்து விட்டதால் இந்தக்குழுவில் தாமும் செல்லப்போவதில்லையென்று ஐக்கிய சோஷலிச முன்னணியின் பிரதிநிதி அத்தெறட சேனிவிரத்தினாவும் மறுத்து விட்டார்.

### வெளியார்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு உணவுப் பொருட்கள் கொண்டு செல்

## வேலணை வைத்தியசாலைக்கு நிதி சேகரிப்பு

(தீவுப்பகுதி)

தற்போதைய இக்கட்டான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு வேலணை கிராமிய வைத்தியசாலையின்பலமுக்கிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இந்த வைத்திய சாலையின்அபிவிருத்திச் சபையினர்பொதுமக்களிடம்நிதிகள் சேகரித்து வருகின்றார்கள். சேர்க்கப்படும் நிதியைக் கொண்டு முக்கிய வேலைகளைச் செய்ய சபை முன் வந்துள்ளது.

பொதுஸ்தாபனங்களைக் கொண்டு சில முக்கிய தேவைகளையும் இந்த அபிவிருத்திச் சபை செய்து வருகின்றது. சபையின் தலைவர் திரு. வா. தவச்செல்வம் ஜே. பி. செயலாளர் டாக்டர் க. ஜெயச்சந்திரன் இந்த வைத்தியசாலையின்வைத்தியஅதிகாரிடாக்டர் ஆ. திருநாவுக்கரசு, மற்றும் அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள் ஆகியோர் வைத்தியசாலையின் அபிவிருத்தியில்அதிக கரிசனை காட்டி வருகின்றார்கள். (15)

## சாளி - விபத்து மரணம்



(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கீரிமலை வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் நேற்று முன்தினம் இரவு விடுதலைப்புலிகள் உறுப்பினர் கப்டன் சாளி மரணமடைந்தார்.

யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான கப்டன் சாளி கவிஞரும் ஓவியருமாவார். அன்னாரின் படைப்புக்கள் சில ஈழநாதத்தில் வெளியாகியுள்ளன.

அவரின் பூதவுடல், அவரது நவாலி இல்லத்திலிருந்து (15-07-90) இன்று காலை 9 00 மணிக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு நவாலி சென். மேரீஸ் சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும், பூதவுடல் 10.00 மணிக்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு நவாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

### மக்கள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கழித்துவிட முடியாது என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை தேசிய முன்னணியின் தலைவர் திருஎன்.டி ராமாராவ் பிரதமர் சிங்கின் பதவி விலகல் முடிவு தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், இப்போதைய நிலைமைகளை காங்கிரஸ் கட்சி தனக்கு சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளுவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை நாம் உருவாக்கவிடக் கூடாது என்றும் தெரிவித்துள்ளார்.

### வி. பி. சிங்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஹரியானா முதலமைச்சர் பதவியை ஓம் பிரகாஷ் செளதாலா துறக்க வேண்டுமென்றும் பாரதீய ஜனதாக் கட்சித்தலைவர் எல். கே. அத்வானி தெரிவித்திருக்கிறார்.

பிரதமர் பதவியைத் துறக்கப்போவதாக திரு. சிங் கட்சித் தலைவருக்குத் தானே எழுதியிருந்தார், ஜனாதி

## காங்கிரஸ் எதிர்க்காது

(சென்னை)

எதிர்வரும் இருபதாம் திகதி திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்பாடு செய்யும் கதவுடைப்புப் போராட்டத்தை காங்கிரஸ் கட்சி எதிர்க்காது என தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கட்சித்தலைவர் வாழப்பாடி இராமமூர்த்திகடந்தவெள்ளிக் கிழமைபத்திரிகையாளருக்குத் தெரிவித்தார்.

### பதவி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யின் உயர்மட்டக் கூட்டம் இன்று கூடி பிரதமர் வி. பி. சிங் பதவி விலகல் பற்றி முழுமையாக ஆராய்ந்து விவாதிக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

### கருணாநிதி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்றிருந்த முக்கிய

தல் மேற்கொள்ளுதல் ஆகிய நடவடிக்கைகளினால் தமிழ் மக்கள் வகைதொகையின்றிக் கொல்லப்படுவதை எப்படியும் நியாயப்படுத்தல் முடியாது, இவையெல்லாம் அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டன. இந்த அனர்த்தங்களால் ஆத்திரமடைந்துள்ள தமிழர், சிங்கள இராணுவம் எமது மத் னத்தளங்களுக்கும், துறைமுகங்களுக்கும் தேவையான வசதிகள் மறுதலிக்கப்பட்டுள்ளன. மேலும் துறைமுகங்களிலும், விமானத்தளங்களிலும் ஸ்ரீலங்கா இராணுவம் நிலை கொண்டுள்ளது''.

''அரசாங்கம் தமிழர்களைப் பழிவாங்கும் நோக்கத்துடன் மேற்கொண்டிருக்கும்


வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு

## நியூ லலிதா ஜுவலர்ஸ்

74/1 கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்

எமது ஸ்தாபனம் வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க தற்போதுநிலவும் நாட்டின் நிலைமை காரணமாகதினசரி காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணிவரை திறந்திருக்கும் என்பதை அறியத்தருகிறோம்.

இங்ஙனம்

நியூ லலிதா ஸ்தாபனத்தார்

(B/1258)


## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்தம்பி நல்லம்மா

புங்குடுதீவு மூன்றாம் வட்டாரத்தைச் சேர்ந்த தரணியாகலை பிரபல வர்த்தகர் காலஞ்சென்ற இராமநாதர் சின்னத்தம்பியின் அன்பு மனைவி திருமதி நல்லம்மா 14 - 07 - 90 அதிகாலை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், சடாச்சரசண்முகதாஸ் (உள்துறை அமைச்சு சிரேஷ்ட உதவிச் செயலாளர் / உள்ளூராட்சி ஆணையாளர் வ. கி. மா. திருக்கோணமலை)குமாரதாஸ் (பிரான்ஸ்), பங்கயற்செல்வி, ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயராணி, பத்மலோசனி (பிரான்ஸ்), கண்ணையா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புமாமியும், காலஞ்சென்ற நாகரத்தினம், கனகம்மா, நல்லதம்பி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 15-07-90 ஞாயிற்றுக்கிழமை பகல் 10.00 மணிக்கு நடைபெற்று மணற் காடு மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும்.

இத்தகவலை ஏற்றுக் கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல் : சி. சடாச்சரசண்முகதாஸ்
(R-519) புங்குடுதீவு - 3


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 -ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் தேதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது


னர்.

வியாபாரிகள்பொருட்களை வைத்து விற்க இடம் போதா மீன்களும் பாஷையூர் சந்தையில் வைத்துத்தான் விற்பனையாகின்றன. (43)

# அகதிகள் முகாமில் குடிநீர்த் தட்டுப்பாடு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் தற்போது அருங்கோடைக் காலமாதலால் கொழும்புத்துறை பிள்ளையார் கிணற்றில் நீர் வற்றும் நிலையில் உள்ளது. பக்கத்தில் உள்ள பள்ளிக் கூடத்தில் அகதிகளாக இருக்கும் 500க்கும் மேற்பட்டவர்கள் இக்கிணற்றில் தான் குடிநீர் எடுக்கிறார்கள். அயலிலுள்ளவர்களுக்கும் இக் குடிநீர்க் கிணறுதான் உதவுகிறது.

யாழ். மாநகர சபையினரும் இம்முகாமுக்கு தண்ணீர் வழங்குவதை நிறுத்தியுள்ளனர். குழாய் நீரும் இப்போது கிடைப்பதில்லை. தண்ணீர்த் தட்டுப்பாட்டால் முகாமில் உள்ள அகதிகள் பெரும் கஷ்டத்துக்கு உள்ளாகி வருகிறார்கள். (43)

## வவுனியாவில் இராணுவம் கொள்ளை

(வவுனியா)

வவுனியா நகரத்தில் தமிழரின் சொத்துக்களைக் கொள்ளையடித்த இராணுவத்தினர் தற்பொழுது அரச உடைமைகளையும் கொள்ளையிடத் தொடங்கியுள்ளனர்.

வவுனியா நகரிலுள்ள அரச திணைக்களங்களும், கூட்டுத்தாபனங்களும் ஏற்கனவே கொள்ளையிடப்பட்டிருந்தன அண்மையில் வவுனியா வீடமைப்பு அதிகாரசபையின் காரியாலயமும் உடைக்கப்பட்டுக்கொள்ளை இடம்பெற்றது.

### தேசிய

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காசோலையை திரு. ஜெயவர்த்தனா நேற்று சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவுக்கு அனுப்பி வைத்தார். ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்த போது தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்த லலித் அத்துலத்முதலியும் தேசிய பாதுகாப்பு நிதி திரட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தமிழர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருள் உணவுப் பொருட்களை வாங்கி ஒழுக்குளம், கோவிற்குளம் பகுதித் தமிழருக்குக் கூடிய விலையில் விற்று வருவதை அறிந்த இராணுவமே இவ்வாறு எச்சரித்துள்ளது.

### கொக்காவில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் மேலும் 7 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், அத்துடன் ஏ. கே. ரைபிள்கள் 15 உம், பல மோட்டார் குண்டுகளையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர். இத்துடன் மொத்தம் 72 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இக்காட்டில் நடந்த மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் இருவர் வீரமரணமடைந்தனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (ம)

### யாழ்நகர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறிந்து கொள்வதற்காக வேடிக்கை பார்க்க வந்த கூட்டத்தைச் சேர்ந்தவர்களே குண்டுவீச்சுக்குப்பலியான ஐவரென்றும் கூறப்படுகிறது.

குண்டுவீச்சில் கொல்லப்பட்டவர்களில் வேலுப்பிள்ளை சந்திரபாலன் (21) அரியாலை மேற்கு, மோசஸ் (19) 85, கிழக்கு ஒழுங்கை சுண்டிக்குளி, இராசலிங்கம் (அரியாலை) ஆகிய மூவர் மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளனர். மற்றையோர் அடையாளம் காணப்படவில்லை. இவர்களின் சடலங்கள் மானிப்பாய் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன.

காந்தமூர்த்தி(26) யாழ்ப்பாணம், செல்வராஜன் (41) கட்டுடை, மோகன் (20), செல்வரத்தினம் (73) நாலாம் குறுக்குத்தெரு, சாம்சன் (38) இராசரத்தினம் (28) ஆகியோர் காயமடைந்து மானிப்பாய் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

### இரு ஸ்ரீலங்கா . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்ததாகவும் அறியப்படுகிறது.

இந்திய கடற்படையினரால் இப்படகுகள் தூத்துக்குடிக்கு கொண்டுசெல்லப்பட்டதுடன் அவைகளில் சென்ற பதினைந்து பேரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அறிய வருகிறது.

### அனைத்துக்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வகிப்பதற்கு முதலில் ஒப்புக்கொண்டிருந்த ஈ. பி. ஆர். எல். எவ், ரெலோ பிரதி நிதிகள் பின்னர் மறுத்து விட்டதால் இந்தக்குழுவில் தாமும் செல்லப் போவதில்லை லையென்று ஐக்கிய சோஷலிச முன்னணியின் பிரதிநிதி அத்தெறட செனிவிரத்தினாவும் மறுத்து விட்டார்.

### வெளியார்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு உணவுப் பொருட்கள் கொண்டு செல்லப்பட்டதன் மூலமே இந்த முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு இந்திய அரசு உணவுகளை அனுப்பி வைக்க வேண்டுமென்று இந்தியாவின் பல தலைவர்கள் கோரிக்கை விட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

பயன்படுத்திக் கொள்ளுவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை நாம் உருவாக்கவிடக் கூடாது என்றும் தெரிவித்துள்ளார்.

### வி. பி. சிங்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஹரியானா முதலமைச்சர் பதவியை ஓம் பிரகாஷ் சௌதாலா துறக்க வேண்டுமென்றும் பாரதீய ஜனதாக் கட்சித்தலைவர் எல். கே. அத்வானி தெரிவித்திருக்கிறார்.

பிரதமர் பதவியைத் துறக்கப்போவதாக திரு. சிங் கட்சித் தலைவருக்குத் தானே எழுதியிருந்தார், ஜனாதிபதிக்கு எழுதவில்லையே என்று இந்திய காங்கிரஸ் செயலாளர் ஆதங்கத் தெரிவித்தார்.

வி. பி. சிங்கின்பதவிவிலகல் முடிவு எப்படியோ மாற்றப்பட்டு விடுமென்றும்தொடர்ந்தும் அவரே பிரதமராக இருப்பாரென்றும் டில்லி அரசியல் வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன,

இராமமூர்த்திகடந்தவெள்ளிக்கிழமைபத்திரிகையாளருக்குத் தெரிவித்தார்.

### பதவி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யின் உயர்மட்டக் கூட்டம் இன்று கூடி பிரதமர் வி. பி. சிங் பதவி விலகல் பற்றி முழுமையாக ஆராய்ந்து விவாதிக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

### கருணாநிதி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்றிருந்த மத்திய அமைச்சர்கள் அவசர அவசரமாக டில்லி திரும்பிக்கொண்டிருப்பதுடன், இருதரப்புப் பேச்சுக்கள் குறித்து நைரோபி சென்றிருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் தனது பயணத்தை இடை நடுவில் முடித்துக் கொண்டு டில்லி திரும்பிக் கொண்டிருக்கிறார்.

## 7-வது ஆண்டு நினைவு நாள்





### வீர மரணம் 15-07-1983

ஆனந்த்
(அருள்நாதன்)
மயிலிட்டி

லெப்டினன்ட்
ஆசீர்சீலன்
(சார்ள்ஸ் அன்ரனி)
திருமலை

உங்கள் மரணத்தின்மூலம் விடுதலைப்போராட்டத்தை வீறு கொள்ள வைத்த வீரர்களே!
உங்களுக்கு எங்கள் வீர வணக்கங்கள்.

— தமிழீழ விடுதலைப் புலிகள்